# PRESTO வைப் பயன் படுத்துவது எப்படி

1. **அட்டை ஒன்று வாங்கவும்**

   PRESTO அட்டை ஒன்றினைwww.prestocard.caஎன்ற இணைய தளம் மூலமோ அல்லது ப்ராம்ப்டனின் கீழ்க்கண்ட ஏதாவதொரு பயண இடைவழி முனையம்/வளாகம் மூலமோ வாங்கவும்: ப்ரேமலீ, டவுன்டௌன், ஷாப்பெர்ஸ் வர்ல்ட், மற்றும் ட்ரினிடி பொது முனையங்கள் (ட்ரினிடி காமன் டெர்மினல்கள்); க்ளார்க் மற்றும் ஸேண்டல்வுட் வளாகங்கள் (க்ளார்க் அண்ட் ஸேண்டல்வுட் ஃபெஸிலிடீஸ்).

   அட்டை வாங்கத் திரும்பப்பெற முடியா வழங்கு கட்டணம் 6 டாலர்கள்.

   குறிப்பு:உங்கள் PRESTO அட்டையில் குறைந்த பட்ச இருப்புத்தொகை 10 டாலர்களும், அதிக பட்சத்தொகை 1000 டாலர்களுமாகும். தேவைக்கேற்ப நீங்கள் உங்கள் அட்டையின் மதிப்புத் தொகையை அடிக்கடி கூட்ட முடியும்.

2. **உங்கள் அட்டையை பதிவு செய்யவும்**

   உங்கள் அட்டையைப் பதிவு செய்ய வேண்டிய இணைய தள முகவரிwww.prestocard.ca.

   குறிப்பு:உங்கள் PRESTO அட்டையை இணைய தளத்தில் பதிவு செய்து 24 மணி நேரங்கள் ஆனவுடன்,**ஏதாவதொரு**PRESTO சாதனத்தில்*அட்டையினால் குறிப்பிட்ட இடத்தை ஏழு நாட்களுக்குள் பதிவை முழுமை பெறச்செய்யத் தட்டவும்.

   **மாணவர்களும் மூத்தோர்களும்** – உங்களிடம்**அவசியம்**உரிய கட்டண விபரங்கள் பெற பதிவு செய்யப்பட்ட PRESTO அட்டை இருந்தாக வேண்டும்.

   குறிப்பு:நீங்கள் வயதிற்கு வந்தவராயிருந்து, உங்கள் PRESTO அட்டையைப் பதிவு செய்ய விரும்பாவிடில், அது பதிவுறா அனாமதேய வயது வந்தோர் அட்டையாக இருக்கும் (காண்கஉங்கள் அட்டையைப் பதிவு செய்வதிலுள்ள அனுகூலங்கள்).

   *PRESTO சாதனம்: ப்ராம்ப்டனின் பயண இடைவழி முனையங்கள் மற்றும் வளாகங்களில் இருப்புத்தொகை பரிசோதிக்கும் அமைப்பையும், அல்லது ப்ராம்ப்டனின் பயண இடைவழி பேருந்துகளில் கட்டணம் செலுத்தும் கருவிகளையும் உள்ளடக்கியது.

3. **கட்டணக் கழிவுகளுக்கான அமைப்பு**

   **மாணவர்களும் மூத்தோர்களும்**– உங்கள் அட்டையை பதிவு செய்தவுடன், நீங்கள்**அவசியம்**மாணவர் அல்லது மூத்தோருக்கான தகுதியை நிர்ணயிக்கவும், பொருத்தமான கட்டண விவரங்கள் பெறவும், ப்ராம்ப்டனின் பயண இடைவழி முனையம் அல்லது வளாகத்திற்கு வர வேண்டும்.

**கூடுதல் பயணிகளுக்கான கட்டணங்களைச் செலுத்த உங்கள் PRESTO அட்டையைப் பயன் படுத்தவும்**

உங்கள் PRESTO அட்டையை கட்டணம் செலுத்தும் கருவியில் தட்டிய பிறகு, பேருந்து இயக்குபவரிடம் கூடுதல் பயணிகளுக்குக் கட்டணம் செலுத்த விரும்புவதாகத் தெரிவிக்கவும். பேருந்து இயக்குபவர், கூடுதல் பயணிகளின் எண்ணிக்கையை தன் கருவியில் பதித்த பிறகு, நீங்கள் அவருடைய PRESTO கருவியில் உங்கள் அட்டையைத் தட்ட வேண்டும்.

குறிப்பு: வயது வந்தோருக்கான கட்டணம் கூடுதல் பயணிகளிடம் வசூலிக்கப்படும்.

உங்கள் அட்டையைப் பதிவு செய்வதிலுள்ள அனுகூலங்கள்

- தொலைந்த அல்லது திருடப்பட்ட அட்டைகள்: காணாமல் போன அட்டை பற்றி PRESTO விடம் முறையிடுங்கள் மற்றும் அது செயல்படுவதைத்தடுத்து நிறுத்துங்கள். தொலைந்து போன முறையீட்டைத்தொடரும் 24 மணி நேரங்களுக்குள் செலவிடப்பட்ட தொகைக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள். நீங்கள் மாற்று அட்டை வாங்குவதோடு அதில் குறைந்தபட்சத் தொகையான 10 டாலர்களையும் செலுத்த வேண்டும். உங்கள் புது அட்டையைப்பதிவு செய்யுமுன், PRESTO வின் அழைப்பு மையத்தை அழைத்து உங்கள் பழைய அட்டையின் செலவிடப்படாத தொகையைப் புது அட்டைக்கு மாற்றச்சொல்லவும்.
- தானியங்கு மதிப்புக்கூட்டி: உங்கள் அட்டையிலுள்ள இருப்புத்தொகை குறிப்பிட்ட அளவைக் கடக்கையில் அதன் மதிப்பை உங்கள் வங்கியின் கணக்கு அல்லது கடன் அட்டை மூலம் கூட்டத் தானியங்கு மதிப்புக்கூட்டும் வசதியைத்தெரிவு செய்யவும். கூடுதல் தகவல்களுக்கு, www.prestocard.ca என்ற இணைய தளத்தை அணுகவும்
- **மைய அரசு வரி விலக்குகள்: பதிவு செய்யப்பட்ட அட்டைகள் மட்டுமே மைய அரசு வரி விலக்குக்குத் தகுதி பெற்றவை.**
  31 **நாட்களை மீறாத தடையற்ற காலப்பகுதியின் இடையே, ஒற்றைப் பயண இடை வழிக்குள், குறைந்த பட்சம்** 32 **ஒரு வழிப் பயணங்களில் உங்கள்** PRESTO **அட்டையைப் பயன் படுத்த வேண்டும்.** PRESTO **வின் இணைய தளத்திலிருந்து, வரி நோக்கங்களுக்காக, நீங்கள் பயன்பாட்டு அறிக்கையை அச்செடுக்க முடியும்.**

கட்டணம்

மிகுதி இருப்பு

கழிக்கப்பட்ட

மிகுதியான

அட்டையை




இருப்புத்தொ

முன்
பரிவர்த்தனை







Brampton Transit